*கவனிக்க.- 2007.07.13 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1507 - 2007 ජූලි 20 වැනි සිකුරාදා - 2007.07.20

*1507 ஆம் இலக்கம் – 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 590 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 592 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, யூலை 27 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, யூலை 13 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

வரையறுக்கப்பட்ட (தனியார்) த ஸ்பைஸ் ஹவுஸ் லங்கா (PV60071)

*2007 ஆம் ஆண்டின் 7 இலக்கம் கொண்ட கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் மேற்கூறப்பட்ட கம்பெனியை 13 யூன் 2007 ஆந் திகதியிலிருந்து கூட்டிணைக்கப்பட்டுள்ளதோடு, அதன் அலுவலகம், ஜோன் வில்சன் பாட்னர்ஸ், சட்டத்தரணி இல. 365, டாம் வீதி, கொழும்பு 12 எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.*

கீர்த்தி வீரசேகர,
சட்டத்தரணி
செயலாளர்
வரையறுக்கப்பட்ட (தனியார்)
த ஸ்பைஸ் ஹவுஸ் லங்கா.

2007, யூன் 30.

7- 363

---

## அட்டோர்ணித் தத்துவம்

கொழும்பு 06, நெல்சன் வீதி, இல. 50 இல் வசிக்கும் சுனிதா லக்ஹிமால் சத்வாணி ஆகிய நான், 1990.11.19 ஆந் திகதி பிரபல நொத்தாரிஸ் சிவராணி ரட்னம் சுப்பிரமணியம் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அட்டோர்ணித் தத்துவம் இல. 1038 மூலம் எனக்கு ஆஷா லக்ஹிமால் சத்வாணி முதல் எனக்கு வழங்கப்பட்ட மேற்படி அட்டோர்னி தத்துவத்தை ரத்து செய்யப்படுகிறது. எனவும் செல்லுபடி அற்றதாக்கப்பட்டுள்ளது என்பதையும் அறியத் தருகின்றேன்.

பொதுமக்களுக்கு நான் அறியத் தருவது என்னவென்றால் மேற்குறிப்பிட்ட அட்டோர்னி தத்துவம் இல. 1038 மூலம் செய்து கொள்ளப்படும். எந்த ஒரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பு இல்லை என்பதையும் மேலும் தெரிவித்து கொள்கின்றேன்.

சுனிதா லக்ஹிமால் சத்வாணி,

7- 364

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

பிரிவு 9 இன் பிரகாரம் பொது அறிவித்தல்

கம்பனியின் பெயர் : வரை/ப பிறிலியன்ற் இன்வெஸ்ற்மென்ற் சொலூசன்ஸ் (தனியார்)

*கம்பனியின் பெயர்* : வரை/ப பிறிலியன்ற் இன்வெஸ்ற்மென்ற் சொலூசன்ஸ் (தனியார்)

*கம்பனி இலக்கம்* : PV 60411

*கூட்டிணைக்கப்படட திகதி* : 26.06.2007

*கம்பனியின் பதிவு செய்யப்பட்ட காரியாலயம்* : இல. 1/1/1, 1 ஆம் மாடி, டீன்ஸ்ரன் ஹவுஸ், டீன்ஸ்ரன் பிளேஸ், கொழும்பு - 03.

வரை/ப. அமல்கமேற்றற் மனேஜ்மன்ற்
சேர்விசஸ் (தனியார்),
செயலாளர்கள்.

96- 2/2, மல்வத்தை, றோட்,
கொழும்பு 11.

2007, யூலை 2

7- 367

---

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

பகிரங்க நொத்தாரிசு சாந்தனி தயாரத்ன என்பவரால் உறுதிப்படுத்தப்பட்டு 2003 ஒகத்து மாதம் திகதியிடப்பட்டு எதிரிசிங்க ஆரச்சிகே சுனேத்ரா என்பவருக்கு வழங்கப்பட்ட அட்டோர்னி தத்துவ இல. 1763 இன்று முதல் இரத்துச் செய்யப்படுகிறது எனவும் செல்லுபடி அற்றதாக்கப்படுகின்றது என்பதையும் மேற்படி அட்டோர்ணித் தத்துவத்தின் முக்கியஸ்தராகவுள்ள திவுலபிட்டிய, பஹல ஹப்புவலானவில் வசிக்கும் ஹெட்டி ஆரச்சிகே தோன சன்திமா திலன்தி அபேவர்த்தன ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறியத் தருகின்றேன்.

ஹெட்டி ஆரச்சிகே தோன சன்திமா திலன்தி அபேவர்தன.

2007, மே 25.

7- 390

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் நியதிகளின்படி, கீழ்க்காணும் கம்பனி 2007 யூன் 26 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது:-

*கம்பனியின் பெயர்* : ஏ. கே. கே. ஷோபா (பிறைவேட்) லிமிட்டெட்

*பதிவு செய்யப்பட்ட முகவரி* : தக்கியா ஒழுங்கை, புதிய தெரு, வெலிகம.

*பதிவு இல.* : பிவீ 60417:

கிறைட்டீரியா மனேஜிமன்ட்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

2007, யூன் 27

7- 391

### கடன் தீர் கணக்கு அதிகாரியாக நியமனம் பற்றிய அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 346 (1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் இலக்கம் 23*

சர்வோதய மாவத்தை வீனஸ் காடன், மாரவிலவை வசிப்பிடமாகக் கொண்ட டொன் நிஹால் கிரிஎல்தெனிய ஆகிய நான், 2007 மே மாதம் 07 ஆந் திகதியன்று உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் சமகி சேர்விசன் என்ட் இன்வெஸ்ட்மன்ட் கம்பனி (பிரைவேட்) லிமிட்டெட் கம்பனியின் கடன் தீர் கணக்கு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளேன் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

டொன் நிஹால் கிரிஎல்தெனிய.

7- 393

---

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் கீழ், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளது என அறியத்தருகிறோம் :-*

கம்பனியின் பெயர் : பெரகன் ஒஸ்ட்ரேலியன் எடியுகேஷன் சென்ரர் (பிறைவட்) லிமிட்டெட்.

*கம்பனியின் இல. :* PV 60051

*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி :* இல. 256/ஏ, ஹைலெவல் வீதி, மொரக்கெட்டிய, பன்னிப்பிட்டிய.

*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2007, மே 23 ஆந் திகதி.*

சபைக் கட்டளைப்படி,

ஐ. கே. டீ.ஜே. தேவப்புர,
கம்பனிச் செயலாளர்.

7- 420

---

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் கீழ், கீழே காட்டப்பட்ட கம்பனி 2007.07.03 அன்று கூட்டிணைக்கப்பட்டது:-*

*கம்பனியின் பெயர் :* எஸ். பி. கோபரெட் கன்ஸல்டன்ஸ் (பிறைவட்) லிமிட்டெட்

*பதிவு இல. :* PV 60477

*பதிவு செய்யப்பட்ட முகவரி :* இல. 99A 1/1, சுனேத்திரா தேவி ரோட், கொஹுவலை, நுகேகொட.

*முகாமைத்துவ பணிப்பாளர் :* பீ. ஜீ. எஸ். மிரிவந்தி.

7- 427

---

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 9 (2) ஆம் பிரிவின் படி, கம்பனியின் பெயர் 13.06.2007 தொடக்கம் மாற்றம் செய்யப்படுவதாக நாம் இத்துடன் அறியத்தருகிறோம் :-*

*பழைய கம்பனியின் பெயர் :* விசன் வேர்க்கஸ் எட்வடைஸிங் (பிறைவட்) லிமிட்டெட்

*பதிவு இல. :* N (PVS) 30902

*அத்தாட்சி செய்யப்பட்ட காரியாலய முகவரி :* லியோ ஹவுஸ், 222, கொடா றோட், கொழும்பு 8.

*புதிய கம்பனியின் பெயர் :* ரிவெலேஷன்ஸஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

*கம்பனி செயலாளர் :* P. A. நந்தசிரி

7- 428

---

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் கீழ், கீழே காட்டப்படும் கம்பனி 29.06.2007 அன்று கூட்டிணைக்கப்பட்டது.*

*கம்பனியின் பெயர் :* டெல்டா காட் (பிறைவேட்) லிமிட்டெட்

*பதிவு இலக்கம் :* PV 60482

*பதிவு செய்யப்பட்ட முகவரி :* இல. 18/82, தலகொல்ல, ராகமை.

*கம்பனி செயலாளர் :* P. A. நந்தசிரி

7- 429

---

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் அடிப்படையில், கீழ் குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2007, யூன் 28 ஆம் திகதி கூட்டு இணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம்.*

கம்பனியின் பெயர் : ட்ரைஷுவர் (பிறைவேட்) லிமிட்டெட்

*கம்பனி இலக்கம் :* PV 60450

*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :* இல. 2 & 4, லேடி மெக்லம் றைவ், நுவரெலியா

மனேஜ்மென்ற் அன்ட் பிஸ்னஸஸ் அட்வைசறி
சேவிஸ்சஸ் லிமிட்டெட்,
கம்பனி செக்கட்ரிஸ்.

7- 430

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் அடிப்படையில், கீழ் குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2007, யூன் 20 ஆம் திகதி கூட்டு இணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம் :-*

கம்பனியின் பெயர் : நொமானிக் கிறாப் (பிறைவேட்) லிமிட்டெட்

*பதிவு இலக்கம் :* PV 60342

*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :* இல. 36/A, நிகபே வீதி, தெஹிவலை.

*நிறுவனத்தின் முகாமையாளர் :* கோ-சேர்வ் (பிறைவேட்) லிமிட்டெட், கம்பனி செக்கட்ரிஸ்

*07- 446*

---

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் அடிப்படையில், கீழ் குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2007, யூலை 4 ஆம் திகதி கூட்டு இணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம் :-*

*கம்பனியின் பெயர் :* ஆவால் இன்டநஷனல் (பிரைவட்) லிமிட்டெட்

*கம்பனி இலக்கம் :* PV 60525

*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :* ஹங்கம கொதர, ஸ்ரீ சுனந்த மாவத்தை, வல்கம, மாத்தறை.

*நிறுவனத்தின் முகாமையாளர் :* கோ-சேர்வ் (பிறைவேட்) லிமிட்டெட், கம்பனி செக்கட்ரிஸ்

*7- 448*

---

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் அடிப்படையில் கீழ் குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2007, யூலை 3 ஆம் திகதி கூட்டு இணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம் :-*

கம்பனியின் பெயர் : சன் இன்சூரன்ஸ் புறோக்கர்ஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட்.

*பதிவு இலக்கம் :* PV 60517

*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :* இல. 71/6, பான்ஸ் இடம், கொழும்பு 7.

*நிறுவனத்தின் முகாமையாளர் :* கோ-சேர்வ் (பிறைவேட்) லிமிட்டெட், கம்பனி செக்கட்ரிஸ்

*7- 447*

---

### அட்டோர்ணி தத்துவப் பத்திரிகை இரத்துச் செய்தல்

*இத்தால் சகலருக்கும் அறியத்தருவதாவது, இராஜாங்கனை, ஜயந்திபுர, 04 யாய, சோலே வெவயில் வசிக்கும் தசநாயக்கலாகே தோன் சுமனாவத்தி என்கிற நான், சைப்பிரஸ் நிகோஸியா நகரில் 2003, நவெம்பர் 26 ஆந் திகதி ஒப்புதழுப்பட்ட இராஜாங்கனை, ஜயந்திபுர, யாய 04, சோலே வெவ முகவரியை உடைய தசநாயக்கலாகே தோன் குணபால என்பவருக்கு அளிக்கப்பட்ட தத்துவப்பத்திரிகை இத்தால் இரத்துச் செய்கின்றேன். மேற்படி பத்திரம் சம்பந்தமாக அதாவது வெளிநாட்டு தத்துவப்பத்திரம் வைத்து செய்யும் எந்தவிதமான நடைமுறைக்கும் இன்றுமுதல் நான் பொறுப்பில்லை என தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*தசநாயக்கலாகே தோன் சுமனாவத்தி,*
*சோலே வெவ, 04 யாய, ஜயந்திபுர,*
*இராஜங்கனை.*

*04.07.2007.*

*7-462*

---

## ஏல விற்பனைகள்

### வரையறுக்கப்பட்ட ஹட்டன் நெஷனல் வங்கி - அளுத்கம கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை*

**சொத்து ஏல விற்பனை**

*பாணந்துறை பிரசித்த நொத்தாரிசு பி. வி. என். டபிள்யு. பெரேரா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் வரையறுக்கப்பட்ட ஹட்டன் நெஷனல் வங்கியினால் எழுதப்பட்டதுமான 2007.02.17 ஆந் திகதிய இலக்கம் 756 என்ற முகவரியின் கீழ் வருமதியான கொடுப்பனவில் கருணாகாலகே குமாரஜித் வஸந்த சில்வா என்பவர் கடனாளராக தவணை தவறியுள்ளாராதலாலும் ஹட்டன் நெஷனல் வங்கி என் மீது அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் சொத்து அமைந்துள்ள இடத்திலேயே 2007. ஒகத்து மாதம் 06 ஆந் திகதி மு. ப. 11.00 க்கு என்னால் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.*

***ஆதனத்தின் விவரணம்.-*** *மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், தென் களுத்துறை தொடமுனை, மலேவன், பத்தே பேருவளை பிரதேச சபை மலேவன் உப காரியாலய எல்லைக்குள் கொடபிடிய "கம் இமே" ஓவிட என்ற பெயரால் அழைக்கப்படும் காணிக்கு அதிகாரம் பெற்ற*

நிலஅளவையாளர் டபிள்யு. எல். பொன்சேகா என்பவரால் அளக்கப்பட்ட 1998 திசெம்பர் 30 ஆந் திகதிய இலக்கம் 2189 என்ற வரைபடத்தின் பிரகாரம் வேறாக்கப்பட்ட காணித்துண்டு ஆகும்.

(விஸ்தீரணம் ; பர்ச்சஸ் 31.5)

***தீர்மான அறிவித்தலுக்காக.***- 2007.05.18 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2007.05.29 ஆந் திகதிய "ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- ஏல விற்பனை முடிவில் வெற்றிகரமான கொள்வனவாளர் கீழே குறிப்பிடும் கட்டணங்களை பணமாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% ;
(2) உள்ளூராட்சி அதிகாரசபைக்குச் செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகாரசபை வரி 1% ;
(3) ஏல விற்பனையயாளரின் தரகுப்பணம் 2 1/2% (இரண்டரை வீதம் மட்டும்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500 ;
(5) வேறு செலவினங்கள் ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான அத்தாட்சிப்படுத்து வதற்கான நொத்தாரிசு கட்டணம் ரூ. 2,000.

விலைக்கு வாங்கிய பணத்தில் 90% பங்குப் பணத்தை 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட ஹட்டன் நெஷனல் வங்கிக்கு செலுத்தல் வேண்டும். 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் ஏற்கனவே செலுத்திய 10% தைத் திருப்பிச் செலுத்தாமல் இருக்கவும் மீள் சொத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமை பத்திரங்களுக்கு மேலதிக விவரங்களுக்கும் வரையறுக்கப்பட்ட ஹட்டன் நெஷனல் வங்கி கொழும்பு 10 டீ. பி. ஜாயா மாவத்தை, இலக்கம் 479, பிரதான காரியாலயம் பிரதான முகாமையாளர் (கடன் அறவீடு), தொலைபேசி இல. 2661815/2661816 ஆல் பெற்றுக் கொள்ளலாம்.

என். எச். பீ. எப். ஆரியரத்ன
நீதிமன்ற ஆணையாளரும்
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளரும்.

இல. 34/31 மற்றும் 32,
நீதிமன்ற சட்டத்தரணிகள்
அலுவலகத் தொகுதி,
கொழும்பு 12.

7- 422

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்- கலேவெல கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட சட்டம்) 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**வசிப்பிடத்திற்கு பொருத்தமான சொத்து ஏல விற்பனை**

***பல்லேபொல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கலேவெல மாத்தளை (அக்குரங்கொடை வழியாக) பாதைக்கு அண்மித்த அலுத்கமை கிராமத்தில் அமைந்துள்ள கொபேய்கலேஹேன எனும் வத்த அல்லது கொபெய்வெலேஹேன எனும் காணியில் பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அத்துடன் அதனுள்ளடங்கும் வீட்டுக் கட்டிடமும் மற்றும் சகலதுமாகும். இது 30 பேர்ச்சஸ் பரப்பளவானதாகும்.***

*(இவ்வாதனம் இஸ்மாயில்கே மொஹமட் ரில்வான் கடப்பாடுடையவராகவும் ஈட்டாளராகவும் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் வங்கியினால் பெறப்பட்ட ஆதனம்)*

இவ்வாதனம் 17.08.2007 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.***- 04.05.2007 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 26.04.2007 ஆந் திகதியுடைய "த ஐலன்ட்", "தினக்குரல்" மற்றும் "லங்காதீப" பத்திரிகையையும் பார்க்கவும்.

***ஆதனத்தை வந்தடைதல்.***- கலேவெல நகர மத்தியிலிருந்து அக்குராங்கொடை வழியாக மாத்தளை பாதையில் சுமார் 10 கிலோ மீற்றர் தூரம் அலுத்கம வரை வந்தால் இவ்வாதனம் பாதைக்கு எல்லையாக வலது பக்கமாக அமைந்துள்ளது.

***கொடுப்பனவு செய்யும் முறை.***- ஏலவிற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்தப்படல் வேண்டும். :-

கொள்வனவு விலையின் 10% ; உள்நாட்டு வரி 1% ; விற்பனையாளர் கட்டணம் 2 1/2% ; நொத்தாரிஸ் கட்டணம் ரூ. 2000 இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூபா 500 ; சகல பகிரங்கப்படுத்தல் செலவு. கொள்முதல் மிகுதி 90% விற்பனை நாளிலிருந்து 30நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் வங்கி தலைமைக் காரியாலயத்தில் அல்லது கலேவெல்ல கிளையில் செலுத்தப்படல் வேண்டும்.

உரித்தான மற்றும் விவரங்களுக்கு : முகாமையாளர் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட், இல. 49/57, மாத்தளை பாதை, கலேவெல என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல. : 066- 2289351, 2287238, 2287237 பெக்ஸ் இல. : 066- 2289265.

ஐ. டபிள்யு. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால்
உத்தரவாதம் பெற்ற ஏலவிற்பனையாளர்.

இல. 83/5 போமலுவ பாதை,
வட்டபுலுவ,
கண்டி.

தொலைபேசி இல. : 081- 2211025, 071- 4755974, 071-4213497, 071- 2755974.
பக்ஸ் : 081-2211025.

7-423/1

## சம்பத் வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கி கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

*கணக்கு இல. : 1030 5006 8807 – டபிள்யு. வி. பெர்னாண்டோ மற்றும் எம். கே. எம். எல். பெர்னாண்டோ.*

*“2007.02.09 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும், 2007.01.30 ஆந் திகதிய “திவயின”, “ஐலண்ட்”, மற்றும் “தினக்குரல்” எனும் பெயரிலான தினசரி செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட 1990 ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் 2006.10.26 ஆந் திகதிய வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைய, பன்னிரெண்டு இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து எண்நூற்றி எழுபத்திரெண்டு ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 12, 47,872.57) ஐ மேலும் 2006 ஓகத்து 02 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை பதினொரு இலட்சத்து முப்பத்தி மூவாயிரத்து நூற்றி முப்பத்திநான்கு ரூபா (ரூ.11,33,134) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பன்னிரெண்டு தசம் ஐந்து சதவீத (12.5%) வட்டியுடனும், உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றை கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யு. ஜயசூரிய அவர்களால் 2007.08.09 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு சொத்து அமைந்த இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது”.*

### அட்டவணை

*வட மேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் பதிவுப் பிரிவில் பிட்டிகல கோரளை தெற்கின் முன்னேஸ்வரம் பத்துவில் இனிகொடவெல எனுமிடத்தில் அமைந்த கோன்கஹகொட்டுவ என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யு. சி. எஸ். எம். அபேசேகர அவர்களால் தயாரிக்கப்பட்டு 1980 பெப்புருவரி 29 ஆந் திகதியிடப்பட்ட நில அளவை வரைபடம் இல. 638/பி இல் குறிப்பிடப்பட்டு துண்டு 28 என அடையாளமிடப் பட்டதுமான பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அதன்கண் அமைந்த சகலதுடனும் மேலும் இந்தக் காணித்துண்டுக்குச் சொந்தமான சகல வழி உரிமைகள் மற்றும் சலுகைகள் சகலதுடன் மேற்கூறப்பட்ட துண்டு 28 இன் எல்லைகளாவன – வடக்கில் : மேற்கூறப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 638/பி இல் துண்டு 27 ; கிழக்கில் : மேற்கூறப்பட்ட நில அளவை வரைபடத்தில் துண்டு 29 ; தெற்கில் ; மேற்கில் : துண்டு 99 (தெருவுக்கான ஒதுக்கு, சரியாகக் கூறுவதாயின் மேற்கில் துண்டு 102 (தெருவுக்கான ஒதுக்கு) என்பவையாகும் மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 638/பி இற்கமைய இந்தக் காணி பதினேழு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 17பே.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி சிலாபம் காணி பதிவகத்தில் தொகுதி /பக்கம் சி 179/12 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*கம்பனிச் செயலாளர்.*

*7– 449/2*

## வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி – நுவரெலியா கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பெறுமதிமிக்க சொத்து ஏலவிற்பனை*

### பெறுமதிமிக்க சொத்து ஏலவிற்பனை

**ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், உடுகிந்த பிரிவு, உடபலாத்த கோரளை வெலிமடகமவில் அமைந்துள்ள அனுமதி பெற்ற நிலஅளவையாளர் பி. விக்ரமசிங்க அவர்களால் வரையப்பட்ட 04.09.1988 ஆந் திகதியிடப்பட்ட 1957 ஆம் இலக்க காணி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முலதெக்கும்புரேகெதரவத்த பரணகெதரவத்த என அழைக்கப்படும் காணி.**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 6.56 பே.)**

*கட்டடங்கள் மற்றும் அதிலுள்ள அனைத்தும் உள்ளடங்கலாக. (நுவரெலியா பிரசித்த நொத்தாரிசு ஏ. பி. கணபதிப்பிள்ளை அவர்களால் 1998 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 18 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2621 & 2622 ஆம் இலக்க அடைமான பிணை உறுதி மூலம் பஸ்நாயக்க முதியான்சேலாகே ஷாந்த உதயமார என்பவரால் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட்டு அடகு வைக்கப்பட்டு மீளிக்கப்படாத சொத்து.)*

*ஹட்டன் நஷனல் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2007 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 8 ஆந் திகதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு தொடக்கம் ஸ்தலத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும்.*

***கொடுப்பனவு செய்யும் முறை.–** ஏல விற்பனை முடிவில் வெற்றிகரமான கொள்வனவாளர் கீழே குறிப்பிட்ட கட்டணங்களை பணமாகச் செலுத்துதல் வேண்டும் :–*

*(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;*

*(2) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் எஞ்சிய 90% விற்பனைத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும் ;*

*(3) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1% விற்பனை வரி (ஒரு சதவீதம்) ;*

*(4) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 25% (இரண்டரை சதவீதம்) ;*

*(5) மொத்த விளம்பரச் செலவு ;*

*(6) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூபா 500 ;*

*(7) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 3,000.*

*அறிவித்தல் விவரத்திற்கு 11.03.2002 ஆந் திகதி வெளியான “த ஐலண்ட்” , “தினகரன்” “திவயின” பத்திரிகைகளையும் 11.01.2002 வெளியான அரசாங்க வர்த்தமானியையும் பார்வையிடவும்.*

மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்வதற்கும், காணி உறுதிப்பத்திரம் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களைப் பார்வையிடுவதற்கும் தலைமை முகாமையாளர் சட்டம், (மீட்புகள்) ஹட்டன் நெஷனல் வங்கி லிமிட்டெட், இல. 479, ரி.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10 என்னும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. 2661816, 2661819, 261815 ஆம் பெற்றுக் கொள்ளலாம்.

சொக்மன் மற்றும் சமரவிக்ரம,
ஐஎஸ்ஓ 9001 : 2000 சான்றுப்படுத்தப்பட்ட
கீர்த்திவாய்ந்த முன்னணி பட்டய ஏலதாரர்கள்,
இலங்கையில் ஆலோசகர், மதிப்பீட்டாளர்கள்
மற்றும் ஆதன முகவர்.

| *தலைமை அலுவலகம் :* | *நகர அலுவலகம் :* |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 05 |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011- 2502680, 011- 2585408, |
| தொலைபேசி/ தொலைநகல் : 081-2224371 | தொலைபேசி/ தொலைநகல் : 011- 2588176 |
| மின்னஞ்சல் : schokmankandy @sltnet. lk | மின்னஞ்சல்: schokman@samera1892.com. |

7-450

---

## சம்பத் வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன்களை அறவிடுதல் (விசேட விதிகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

கணக்கு இல. : 0020 5000 5782 - எம். எஸ். எம். யஸீன்.

"2003.12.26 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும், 2003.12.16 ஆந் திகதிய "தினமின", "டேலி நியூஸ்", மற்றும் "தினகரன் எனும் பெயரிலான தினசரி செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட 1990 ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கி கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் 2003.09.25 ஆந் திகதிய வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைய, மூன்று இலட்சத்து ஐம்பதாயிரத்து எண்நூற்றி தொண்ணூற்றிமூன்று ரூபா பதினைந்து சதம் (ரூ.3,50,893.15) ஐ மேலும் 2003 யூலை 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை மூன்று இலட்சம் ரூபா (ரூ.300,000) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பதின்நான்கு சதவீத (14%) வட்டியுடனும், உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றை கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யு. ஜயசூரிய அவர்களால் 07.08.2007 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு சொத்து அமைந்த இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது".

### அட்டவணை

சபரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்தில் பனவல கோரளை இல் எஹலியகொட பிரதேச சபை எல்லையினுள் அஸ்கங்குல எனுமிடத்தில் அமைந்த பொல்லெலிபிட்டிய என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். டீ. பி. ஜே. குமார அவர்களால் தயாரிக்கப்பட்டு 1999, பெப்புருவரி 24 ஆந் திகதியிடப்பட்ட நில அளவை வரைபடம் இல. 371 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 9 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். மேற்கூறப்பட்ட துண்டு 9 இன் எல்லைகளாவன - வடக்கில் : துண்டுகள் 8,7 மற்றும் 6 ; கிழக்கில் : துண்டுகள் 6 மற்றும் 5 ; தெற்கில் ; துண்டு 5 மற்றும் ; மேற்கில் : துண்டுகள் 10 மற்றும் 8 என்பவையாகும் மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 371 இற்கமைய இந்தக் காணி பதினொன்று தசம் ஒன்பது பேர்ச்சஸ் (0ஏ. 00றூ. 11.9பே.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி அவிஸ்ஸாவல காணி பதிவகத்தில் தொகுதி /பக்கம் ஆர். 49/ 227 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7- 449/1

---

## கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

பெறுமதிமிக்க காணி (பாணந்துறை, தல்பிட்டி தேபெத்த, பாணந்துறை தொட்டமுனை, ஹொறத்துடுவே, பாணந்துறை- கொழும்பு பழைய வீதி (ஞானவிமல மாவத்தை)யில் அமைந்துள்ளது.) ஏல விற்பனை

சிலிங்கோ பில்டிங் சொசயிட்டி லிமிட்டெட்,
இல. 315, ஆர். ஏ. டீ. மெல் மாவத்தை, கொழும்பு 3.

வழக்கு இல.: 17361 எம்.பி. ................................ வாதி

மற்றும்

(1) செல்லப்பெரும ரங்கநாத் நவோதனி இனோஷா பெர்னாண்டோ
(2) கங்கானம் ஆரச்சிகே பிரசாத் சஞ்ஜீவ
(3) கங்கானம் ஆரச்சிகே கருணதாச, இல. 11, ஞானவிமல மாவத்தை, ஹொறந்துடுவே, மொறட்டுவ எனும் முகவரியைச் சேர்ந்த அனைவரும்

................................ பிரதிவாதிகள்

2005, யூலை 13 ஆந் திகதியிடப்பட்ட மேற்கூறப்பட்ட வழக்கில் பதியப்பட்டுள்ள உத்தரவின் பிரகாரம் மேற்கூறப்பட்ட பிரதிவாதிகள் ஆறு இலட்சத்து தொண்ணூற்றைந்து ஆயிரத்து நூற்று தொண்ணூற்றிரண்டு ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 6,95,192.57) மற்றும் நான்கு இலட்சத்து அறுபத்து நான்கு ஆயிரத்து எழுநூற்று தொண்ணூற்றொன்பது ரூபா இருபத்தேழு சதம் (ரூ. 4,64,799.27) கொண்ட தொகையை, அதன்மீது 2002.08.31 ஆந் திகதியிலிருநது பயனுறும் வகையில் ஆண்டிற்கு 17% வட்டி மற்றும் அதன்பிறகு,

நீதிமன்ற தீர்ப்பிலிருந்து முழு கொடுப்பனவு வரை மொத்தத் தொகைமீது ஆண்டிற்கு 17% மேலும் வட்டியுடனும் சேர்த்து மேற்கூறப்பட்ட வாதிக்கு செலுத்துவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளார்கள்.

பிரதிவாதிகளினால் வாதிக்கு வரவேண்டிய மேற்கூறப்பட்ட பணங்களை அறவிடும்பொருட்டு, இத்துடனுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள ஆதனம் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென மேலும் இத்தால் கட்டளையிடப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட வழக்கில் வழங்கப்பட்டுள்ள ஆணைக்கமைய, கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள, வாதியிடம் மேற்கூறப்பட்டுள்ள பிரதிவாதிகளினால் ஈடுவைக்கப் பட்டுள்ள ஆதனம், வாதிக்கு வரவேண்டியுள்ள சொல்லப்பட்ட பணங்களை அறவிடுவதற்காக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட இருக்கிறது.

ஆகவே, இத்துடன் விவரிக்கப்பட்டுள்ள மேற்கூறப்பட்டுள்ள ஆதனம் 2007, ஒகத்து 16 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மேற்கூறப்பட்ட இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென கொள்வனவு செய்ய அக்கறையுள்ள பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், கெசெல்வத்தை பிரதேச சபை எல்லைகளுக்குள் பாணந்துறை தொட்டமுனை, தல்பிட்டி தேபெத்த, பாணந்துறை, ஹொறந்துடுவயில் அமைந்துள்ளதும் ஹொறந்துடுவ மற்றும் கொறக்காகலந்த என்ற குருந்துவத்தை என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். எம். குரே அவர்களால் தயாரிக்கப்பட்டு 1999, மே 18 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 2400 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 9ஏ என அடையாளமிடப்பட்டுள்ளதுமான காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டப்படுகின்ற கட்டடம், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. இதன் எல்லைகளாவன - வடக்கு : ஞானவிமல மாவத்தை ; கிழககு : துண்டு 9பி ; தெற்கு : மல்கொல்ம் அல்விஸ்ஸின் ஆதனம் ; மேற்கு : பிரேமலால் பெர்னாண்டோவின் ஆதனம். இது எட்டு தசம் இரண்டு ஒன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 8.21பே.) விஸ்தீரணம் உடையது. பாணந்துறை காணி பதிவகத்தில் எவ்383/01 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**-கொழும்பிலிருந்து கொழும்பு-காலி (பழைய காலி வீதி) வழியே மொறட்டுவை பாலத்திலிருந்து பாணந்துறை நோக்கி சிறுதூரம் செல்லும்போது இடப்பக்கத்திலுள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்தை எல்லையாகவுள்ள ஞானவிமல மாவத்தை (ஏறக்குறைய 18 அடி அகல தாரிடப்பட்ட வீதி) ஐ எதிர்கொள்வீர்கள். அவ்வீதி வழியே ஏறக்குறைய 1/4 கி. மீ. செல்ல, விற்பனைக்குரிய இவ்வாதனம் வலப்பக்கத்தில் அமைந்துள்ளது.

**நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலைமதிப்பீடு.**-ரூபா. 38,73,500.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**-விற்பனை முடிவில், கொள்வனவாளர் பின்வருவற்றை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 25% (இருபத்தைந்து வீதம்) ;
(2) ஏலதாரரின் உறப்பட்ட விற்பனை செலவுகள் ;
(3) உள்ளூர் அதிகாரச சபை வரி ;
(4) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2 1/2 (இரண்டரை வீதம்).

கொள்வனவு விலையின் மிகுதி 75% (எழுபத்தைந்து வீதம்) விற்பனை திகதியிலிருநது 30 நாட்களுக்குள் இவ்வழக்கின் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

உரித்து மற்றும் உறுதிகள் பற்றிய வேறேதேனும் தகவல் "கொழும்பு 4, காலி வீதி, இல. 101, வாதியின் சட்ட சம்பந்தமான பிரிவு" இடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட முடியும்.

டபிள்யூ. எம். விக்கிரமரத்ன,
உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைதிப்பிடுநர்,
மற்றும் நீதிமன்ற ஆணையாளர்.

220/5, கம்பஹா வீதி,
யக்கல.
தொலைபேசி இல. : 033-2222568
011-2787314

7-426

---

## வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி - குளியாபிட்டி கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால்
வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்)
சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**பெறுமதிமிக்க (வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், குளியாபிட்டி பதிவுப் பிரிவினுள், கட்டுகம்பளை ஹத்பற்று, யாகம்பற்று கோறளை, இஹல மந்தகொந்தன எனும் கிராமத்தில் வெரலுகஸ்அகரவில் அமைந்துள்ளதும் "கவுல்கெலே" என அறியப்படுவதும் அழைக்கப்படுவதுமான காணியின் உள்ளிருந்தும் புறமுகமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். எம். திஸாநாயக்க அவர்களால் தயாரிக்கப்பட்டு 2005, ஏப்பிறல் 29 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1393 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும்) ஏல விற்பனை**

**காணியின் விஸ்தீரணம் : 1றூட் 28 பேர்ச்சஸ்கள்**

*(குருநாகலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். ஹேவா பத்திரண அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2005, ஒகத்து 24 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 1132 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ள கடப்பாடுடையவரான கருணா பெடிஸ்லகே சுகந்தி பிரியதர்ஷனியினால் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம்)*

வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2007, ஒகத்து 20 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**-2007, மாச்சு 30 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2007, மே 23 ஆந் திகதிய "ஜலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்** .-வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்);
(4) விற்பனையில் உறப்பட்ட, மொத்த விளம்பரச் செலவுகள் ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கிக்கு செலுத்த வேண்டும். மிகுதி தொகை மேற்குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புகளையும் "கொழும்பு 10, ரி. பி. ஜாயா மாவத்தை, இல. 479, 'எச். என். பி. கோபுரங்கள்', வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி, பிரதம முகாமையாளர் (அறவீடுகள்)" அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இல. : 011-2661815, 2661816.

என். எச். பீ. எவ். ஆரியரத்ன,
உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைதிப்பிடுநர்,
மற்றும் நீதிமன்ற ஆணையாளர்.

இல. 34/31, மற்றும் 32,
"சட்டத்தரணிகள் அலுவலகக் கட்டிடத்தொகுதி",
கொழும்பு 12.

7-451/7

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.